Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 92 | திங்கள் Monday | 02.02.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# நாட்டின் வளர்ச்சிக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



தொலைநோக்குடன், நாட்டின் வளர்ச்சிக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பிரதமர்மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் 2026 குறித்து பிரதமர்மோடி தெரிவித்திருப்பதாவது, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த மத்திய பட்ஜெட் நாட்டின் வளர்ச்சிக்கானது. 2047இல் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளது. பட்ஜெட்டில் மாநிலங்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நாட்டின் வளர்ச்சியை வேகப்படுத்தும். நாட்டு மக்களின் தொழில திறனை வளர்ப்பதற்கு நிர்மலா சீதாராமன் முக்கியத்துவம் அளித்துள்ளார். உலகத்தின் டேட்டா சென்டர் மையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும். வாய்ந்த அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளன.

இந்த பட்ஜெட் இந்தியாவின் உலகளாவிய பங்கை மேலும் வலுப்படுத்துகிறது. இந்தியாவின் 140 கோடி குடிமக்கள் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இருப்பதில் திருப்தி அடைவது மட்டுமல்லாமல்,உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக விரைவில் மாறவும் விரும்புகிறோம். இது நாட்டின் கோடிக்கணக்கான குடிமக்களின் உறுதிப்பாடாகும். நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதிலும், பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டுவருவதிலும் கவனம் செலுத்தும் தனித்துவமான பட்ஜெட் இது. மேலும், அதிக மூலதனம் மற்றும் அதிக வளர்ச்சியின் கலவையையும்பட்ஜெட்கொண்டுள்ளது. இவ்வாறு குறிப்பிட்டார். மேற்கு வங்கத்தில் இந்த முறை ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதில் பாஜக முனைப்புடன் உள்ளது. பட்ஜெட்டிலும் கூட மேற்கு வங்கத்திற்குப் பெரியளவில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. துர்காப்பூரில் இணைக்கப்படும் வகையில் 'கிழக்குக் கடற்கரை தொழில் பெருவழித் திட்டத்தை' மம்தா முன்மொழிந்தார். மேலும், பீகார், ஜார்கண்ட், மேற்கு வங்கம், ஒடிசா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய ஐந்து 'பூர்வோதயா' மாநிலங்களில் ஐந்து சுற்றுலாத் தலங்களும் உருவாக்கப்படும் என அவர் அறிவித்தார். குஜராத்தில் உள்ள சூரத்தையும், வங்கத்தில் உள்ள டான்குனியையும் இணைக்கும் பிரத்தியேகச் சரக்குப் போக்குவரத்து காரிடார் திட்டத்தையும் நிர்மலா சீதாராமன் முன்மொழிந்தார். இந்தப் புதிய வழித்தடம் கிழக்கு-மேற்கு மாநிலங்களுக்கு இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்தி, சரக்கு போக்குவரத்திற்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்கும்!

# மத்திய பட்ஜெட் 2026, 2027 சிறப்பு அம்சங்கள், விலை குறையும், விலை உயரும் பொருட்கள் எவை?




: நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் 2026-27 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார். பட்ஜெட் தாக்கத்தால் எந்தெந்த பொருட்கள் மலிவாக கிடைக்கும், எந்தப் பொருட்களின் விலை அதிகரிக்கும் என்று பார்ப்போம்.

2026-27 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை மக்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாரா மன் காலை 11 மணிக்கு தாக்கல் செய்தார். 2026-27 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், தனிநபர் வருமான வரி விகிதங்களிலும், வரம்புகளிலும் எந்த மாற்றமும் இல்லை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அதேநேரத்தில், 2025 வருமான வரிச் சட்டம் ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும் என்று அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மத்திய பட்ஜெட்டின் எதிரொலியாக, சில பொருட்கள் கடுமையான விலை உயர்வையும், சில பொருட்கள் விலை வீழ்ச்சியையும் சந்திக்க போகின்றன. அது பற்றி இங்கு விரிவாக பார்க்கலாம்.

2026-27-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளுமன்றத்தில் இன்று தாக்கல் செய்தார். இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக, இந்த பட்ஜெட்டானது ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்ததன் மூலமாக, தொடர்ச்சியாக 9 ஆண்டுகள் மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்த முதல் பெண் நிதியமைச்சர் என்ற பெருமையை நிர்மலா சீதாராமன் பெற்றுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் பல முக்கிய அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. செமி கண்டக்டர் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.40,000 கோடி ஒதுக்கீடு, அரிய வகை கனிமம் எடுப்பதற்காக தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் புதிய வழித்தடம், சென்னை - ஹைதராபாத், சென்னை - பெங்களூரு இடையே அதிவேக ரயில் பாதை உள்ளிட்ட பல அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இந்த மத்திய பட்ஜெட்டில் துறை ரீதியாக ஒதுக்கப்பட்ட நிதி, ஏற்றுமதி - இறக்குமதி தொடர்பாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக பல பொருட்கள் விலை உயர்வையும், விலை வீழ்ச்சியையும் சந்திக்கவுள்ளன.

இந்த பட்ஜெட்டில் தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களுக்கும் மற்றும் தேர்தல் நடைபெறாத மாநிலங்களுக்கும் அறிவிப்புகள் வெளியாகியுள்ளது" என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டுக்குப் பிந்தைய செய்தியாளர் சந்திப்பில் பேசிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்க அரசாங்கம் உந்துதல் அளித்து வருகிறது. முதன்மையாக, நாங்கள் கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் சூழலமைப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறோம், இது தொடரும்.

நாங்கள் சீர்திருத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும் போதுமான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இது தொடரும்.

21 ஆம் நூற்றாண்டு முற்றிலும் தொழில்நுட்பத்தால் இயக்கப்படுகிறது. எனவே, பொதுமக்களுக்குப் பயனளிக்கும் வகையில் தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

நகரங்கள் இந்தியாவின்வளர்ச்சி,புத்தாக்கம் மற்றும் வாய்ப்புகளின் இயந்திரங்களாக உள்ளன. அரசாங்கம் இப்போது இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் மற்றும் நவீன உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தேவைப்படும் கோயில் நகரங்கள் மீது கவனம் செலுத்துகிறது. இந்த பட்ஜெட், நகரப் பொருளாதாரப் பகுதிகளை (CER) அவற்றின் குறிப்பிட்ட வளர்ச்சி இயக்கிகளின் அடிப்படையில், பொருளாதார ஆற்றலை பெருக்கும் நோக்கம் கொண்டுள்ளது.சீர்திருத்தம் மற்றும் முடிவுகளின் அடிப்படையிலான நிதி செயல்முறையுடன் திட்டங்களைச் செயல்படுத்த, ஒரு நகரப் பொருளாதாரப் பகுதிக்கு 5

### விலை உயரும் பொருட்கள்:

சிகரெட்
பீடி
பான் மசாலா
குட்கா

இரும்பு,நிலக்கரி,உப்பு போன்ற கனிமங்கள்
சுங்க வரி
துபானங்கள்,நிலக்கரி,

இரும்பு பொருட்கள், எலெக்ட்ரானிக் பொருட்கள் கைக்கடிகாரங்கள்

### விலை குறையும் பொருட்கள்:

17 புற்றுநோய் மருந்துகள்
மின்சார வாகன பேட்டரிகள்
விளையாட்டு உபகரணங்கள்
சோலார் பேனல்கள்
ஸ்மார்ட் போன்கள்
தோல் உபகரணங்கள்

மைக்ரோவேவ்ஓவன்கள்
லித்தியம் பேட்டரி பாகங்கள்
சிவிலியன் பயிற்சி விமான பாகங்கள்
7 உயிர்காக்கும் மருந்துகள்
நீரிழிவு தொடர்பான

மருந்துகள்
வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள்
வெளிநாட்டு கல்வி
மதுபான கழிவுகள்
காலணி பாகங்கள் ஏற்றுமதி
மைக்ரோவேவ் ஓவன்
தோல் ஏற்றுமதி

ஆண்டுகளில் ரூ. 5000 கோடி ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. ஒரு நகரத்திற்கு ஆண்டுக்குரூ.1000கோடி வழங்கப்படுகிறது. இந்த முக்கியத்துவம் பெரும்பாலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு அளிக்கப்பட உள்ளது. செமிகண்டக்டர் திட்டத்துக்கு இரண்டு முக்கிய அறிவிப்புகள் வெளியாகியுள்ளது. அவை இந்தியாவின் பங்களிப்பு மற்றும் அறிவுசார் சொத்துரிமை தொடர்பான விஷயங்களை மேம்படுத்தும். 40,000 கோடி ரூபாய் மதிப்பிலான மின்னணு பாகங்கள் உற்பத்தித் திட்டம், மின்னணுத் துறையில் தற்சார்பு நிலையைஅடையபெரிய ஊக்கமளிக்கிறது. இந்தியா தனது சொந்த உற்பத்திப் பொருட்களைக் கொண்டு தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகையில், அரிய மண் உலோகங்களுக்கான வழித்தடங்களை அமைப்பதையும் நாங்கள் அறிவித்துள்ளோம்.

எனவே, இத்தகைய கனிமங்களை நாங்கள் கண்டறிந்து, அவற்றை ஆய்வு செய்து, பதப்படுத்தி, நமக்குக் கிடைக்கச் செய்யும்போது,அரிய மண் உலோகங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான நமது சார்புநிலை குறையும். இந்த அரிய மண் உலோக வழித்தடங்கள் ஒடிசா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் அமைய உள்ளன.

எனவே,இவை மிகவும் முக்கியமான முன்னேற்றங்கள்.இவை இந்தியப் பொருளாதாரத்தில் பலதரப்பட்ட, ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தப் போகின்றன. இதனால் காந்தங்கள் மற்றும் அரிய மண் உலோகங்களுக்கான நமது சார்புநிலை குறைக்கப்படும்" என்று அவர் கூறினார்.

# "வழக்கத்தைவிட பெரும் ஏமாற்றம்" மத்திய பட்ஜெட் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிக்கை



சென்னை: "இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய திட்டங்கள் ஏதும் இடம்பெறவில்லை. அனைவருக்கும் கல்வி திட்டத்துக்கான ரூ. 3,548 கோடி, ஜல் ஜீவன் திட்டத்துக்கான ரூ. 3,112 கோடி குறித்தும் எந்த அறிவிப்பும் இல்லை. தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்திவருகிறது என்பதை இது வெட்டவெளிச்சமாக்கியிருக்கிறது" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

மத்திய பட்ஜெட் குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழ்நாட்டுக்கான சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், இந்த ஆண்டாவது, ஒன்றிய பாஜக அரசின் கண்களுக்குத் தமிழ்நாடு தெரியும் - அவர்களது காதுகளில் நமது உரிமைக்குரல் விழும் என்று எதிர்பார்த்திருந்தோம். அந்த எதிர்பார்ப்பைப் பொய்க்கச் செய்து, ஏமாற்றத்தை வழங்கியிருக்கிறது ஒன்றிய பாஜக அரசு.

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2026-27-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் நலன் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதோடு, ஏழைகள் - பெண்கள் - விவசாயிகள் - விளிம்பு நிலை மக்கள் என எந்தப் பிரிவினருக்கும் நன்மை பயக்கும் முக்கியத் திட்டங்கள் இதில் இடம்பெறவில்லை.

மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு முறையில், தமிழ்நாடு உள்ளிட்ட வளர்ச்சியடைந்த மாநிலங்களை ஒன்றிய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்றகருத்தை, நாம் வலுவாக முன்வைத்து வருகிறோம். மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் பங்கு 41 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட்ட வேண்டும் எனத் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கை இம்முறையும் புறக்கணிக்கப்பட்டு, மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு தொடர்ந்து 41 விழுக்காடு என்ற அளவிலேயே தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த ஏமாற்றத்தையே தருகிறது.

அதுமட்டுமின்றி, இந்தியப் பொருளாதார வளர்ச்சியில், மாநிலங்களின் பங்களிப்பை உரிய முறையில் 16-ஆவது நிதிக்குழு அங்கீகரிக்க முற்பட்ட போதும், நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தி வரும் தமிழ்நாட்டுக்கு நிதிப்பகிர்வு சதவீதம் இதர வளர்ச்சியடைந்த மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகவே அளிக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. தமிழ்நாட்டுக்கான வரிப்பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச்சொற்ப அளவிலேயே அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இருக்கும் எனத் தெரியவருகிறது. இதன் மூலம் முதற்கட்ட மதிப்பீடுகளின்படி இதர ஒப்பிடத்தக்க மாநிலங்களைக் காட்டிலும் ஆண்டுக்கு சுமார் ரூ.5,000 கோடி நிதி இழப்பு ஏற்படும். கடந்த பல ஆண்டுகளாகவே நிதிப்பகிர்வில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் நிலை, இன்று 16-ஆவது நிதிக்குழுவிலும் சரிசெய்யப்படவில்லை என்பது மிகுந்த கவலை அளிக்கிறது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

**தினத்தளம்**

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தென்காசி மாவட்டத்தில்
## ஓய்வூதியர்களுக்கு அரசு அறிவித்துள்ள திட்டத்திற்கு ஓய்வு பெற்ற காவல்துறையினர் நன்றி தெரிவித்து தீர்மானம்

சுரண்டையில் தென்காசி மாவட்ட ஓய்வு பெற்ற காவல்துறை நலச்சங்க மாதாந்திர கூட்டம் நடந்தது

கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் வண்டி முத்து தலைமை வகித்தார்

செயலாளர் ராஜேந்திரன் கூட்டத்தின் நோக்கங்கள் குறித்து பேசினார் பொருளாளர் தம்பித்துரை வரவேற்றார் சிறப்புவிருந்தினராக ஓய்வுபெற்றஏடிஎஸ்பிக்கள் வள்ளல் காத்தான் மற்றும் புலியூர் உடையான். ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்

சட்டஆலோசகர்செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் தளவாய் சுந்தரம் தொகுத்து வழங்கினார்

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

ஓய்வூதியர்களுக்கு அரசு அறிவித்துள்ள திட்டத்திற்கு நன்றி தெரிவித்தும்

கமிட்டேசன் பணப்பயனை 15ஆண்டில் இருந்து 11 ஆண்டாக குறைக்க வேண்டும்

பணியின் போது மரணமடைந்த காவல்துறையினர் குடும்பத்திற்கு வழங்க வேண்டிய கருணை அடிப்படையிலான வேலை வாய்ப்பை உடனுக்குடன் வழங்க வேண்டும் இன்சூரன்ஸ் திட்டத்தை அரசே நடத்த வேண்டும் உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன



# நடுபழனி மரகத தண்டாயுதபாணி முருகர் கோவில் தைப்பூச திருவிழா
## 108 பால்குடம் மற்றும் காவடி எடுத்த பக்தர்கள்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் அருகே உள்ள நடுபழனி என்று அழைக்கப்படும் பெருங்கரணை கிராமத்தில் கனகமலையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் மரகத தண்டாயுதபாணி சுவாமி

முருகன் கோவில் உள்ளது.

தைப்பூச பெருவிழா என்பதால் மரகத தண்டாயுதபாணி முருகர் கோவிலில் ஏராளமான பக்தர்கள் தனது நேர்த்திக் கடனாக பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி, 108 பால்குடம் எடுத்து கனக மாலையை சுற்றி வந்து முருகனுக்கு பாலாபிஷேகம் செய்தனர் பின்பு முடி காணிக்கை செலுத்தி

அலகு குத்தியும் முருக பக்தர்கள் மலையேறி தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர் வெளி மாவட்டங்களில் இருந்து சுற்றுவட்டார பகுதியில் இருந்து பல ஆயிரக்கணக்கான முருக பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் முருகனை வழிபட்டனர்.

# கடமலைப்புத்தூர் வள்ளலார் கோவிலில் 12ம் ஆண்டு தைப்பூச பெருவிழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே நெ.109 கடமலைப்புத்தூர் சுத்த சன்மார்க சங்கம் வள்ளலார் கோவிலில் தைப்பூசப் பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

கடமலைப்புத்தூர் வள்ளலார் திருக்கோவிலில் காலை 6-00 மணிக்கு மங்கள இசை கொடியேற்றத்துடன் விழா துவங்கியது.

அதனைத் தொடர்ந்து காலை, மதியம் என 1500 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடலூர் சுத்த சன்மார்க்க நிலையம் டாக்டர் நா.மகாலிங்கம், வடலூர் சுத்த சன்மார்க்க நிலையம் தலைவர் சங்கர் வானவராயர், ஓ.பி.ஆர்.கல்வி நிறுவனங்களின் தாளாளர் டாக்டர் இரா.செல்வராஜ், கணக்காளர் எஸ். கார்த்திகேயன், கடமலைப்புத்தூர் சுத்த சன்மார்க்க சங்க தலைவர் டி எஸ் சதாசிவம், ஊராட்சி மன்ற தலைவர் ராஜன் ஆகியோர் விழாவை தலைமை தாங்கி தொடங்கி வைத்தனர்.

இதில் கடமலைப்புத்தூர் சுத்த சன்மார்க சங்கத்தின் பொறுப்பாளர்கள் புருஷோத்தமன், ஆனந்தன், பாபு, திருமலை, வழக்கறிஞர் பக்தவச்சலம், உட்பட கிராம பொதுமக்கள் இளைஞர்கள் ஆன்மீகஅன்பர்கள் பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக பிரதி மாதம் தோறும் பூசம் வழிபாடு மற்றும் அன்னதானம் நடைபெறும் என சன்மார்க்க சங்கம் சார்பில் தெரிவித்தனர்.

# நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சர்வதேச அளவிலான கருத்தரங்கம்

நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறையின் சார்பில் சர்வதேச அளவிலான கருத்தரங்கம் இனிதே நடைப்பெற்றது. இவ்விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர்பானுமதிசண்முகன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.




சண்முகன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பெங்களூரில் செயல்பட்டு வரும் BMS தொழில் நுட்பக் கல்லூரியின் மேலாண்மை துறை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவி பேராசிரியர் பி.ராஜேந்திரா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இளங்கலை வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறையின் தலைவர் டி. குமார் வரவேற்புரை வழங்கினார்.

மேலும், இவ்விழாவில் பெங்களூரு கிரிஸ்ட் நிகர்நிலைபல்கலைக்கழகத்தின் உதவிப்பேராசிரியர் முனைவர்.எம்.உமாசங்கர், அமெரிக்காவின் சவுண்ட் ஹவுண்ட் AI -ன் உதவி இயக்குநர் நோபல் குப்புசாமி, நியூயார்க் UBS ஃபினான்சியல் சர்வீஸின் உதவி இயக்குநர் ராஜேஸ்வரி தேசிங்க ராஜன், பெருந்துறை ஈங்கூர் ஹிந்துஸ்தான் கலை மற்றும் வணிகவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். என்.ராமன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு இன்றைய காலகட்டத்தில் செயற்கை நுண்ணறிவு வணிகவியல் துறையில் எவ்வாறு பயன்படுகிறது என்பதை காணொலி காட்சி மூலம் மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார்கள்.

இந்நிகழ்வில் 40க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 550க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர். அதில் 70க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளின் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். மனோகரன், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ். திருமூர்த்தி, மற்றும் நிர்வாக அதிகாரி முனைவர். வி.சி.சீனிவாசன் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தார்கள். முதுகலை வணிகவியல் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறையின் தலைவர் வி.வீரக்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## கோவை மாவட்டம் ஒண்டிப்புதூர் அரசு போக்குவரத்து பணிமனையில்
# 20 ஆண்டுகளாக நடத்துனராக பணியாற்றி, ஓய்வு பெற்ற நடத்துனர் ஜான் பீட்டருக்கு வழியனுப்பு விழா நிகழ்ச்சி

கோவை மாவட்டம் இடையர் பாளையம் பகுதியை சேர்ந்தவர் ஜான் பீட்டர், இவர் ஒண்டிப்புதூர் அரசு போக்குவரத்து கழகத்தில்,20.08.2006ம்ஆண்டு முதல் 31.01.2026 வரை நடத்துனராக பணியாற்றி ஓய்வு பெற்றார். இவரது பணி நிறைவு விழாநிகழ்ச்சிஒண்டிப்புதூர் அரசு பேருந்து பணிமனையில் நடைபெற்றது. 60 வயதை நிறைவு பெற்றதன் காரணமாக பணி ஓய்வு பெற்ற நடத்துனர் ஜான் பீட்டருக்கு, சக பணியாளர்களான நடத்துனர்கள் ஒட்டுநர்கள் என பலரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் ஒண்டிப்புதூர் கிளை மேலாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். அறிவர் அம்பேத்கர் போக்குவரத்து தொழிலாளர் விடுதலை முன்னணி அமைப்பின் பேரவை பொதுசெயலாளர் விடுதலை ரவி வரவேற்புரையாற்றினார். மேலும் சிறப்பு விருந்தினராக அனைத்து சமூக மக்களும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூக ஆர்வலரும் வழக்கறிஞருமானபுஸ்பாணந்தம் கலந்து கொண்டு, பணி ஓய்வு பெற்ற ஜான் பீட்டருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். தொடர்ந்து அனைவரது மத்தியிலும் பேசிய ஜான் பீட்டர், தனக்கு ஆரம்ப கால கட்டத்தில் எனக்கு ஓடாத வண்டியில் டியூட்டி போட்டார்கள். தினசரி இரவு 1.20க்கு மதுரைக்கு செல்லும் பேருந்தில் தனக்கு டியூட்டி போட்டார்கள். இந்த வாகனத்திற்கு நான் டியூட்டிக்குவந்தால்வண்டிக்கு டிரைவர்கள் வரமாட்டார்கள், டிரைவர் வந்தால் பேருந்து சரியாக ஓடாது என்ற நிலையில் தொடர்ந்து பணியாற்றினேன் பின்னர்எனக்காகவேசிவக்குமார் எனும் ஓட்டுநர் வந்து இந்த பேருந்தை தொடந்து இயக்கி வந்தோம் என்றார். இவ்வாறு பல்வேறு இடையூறுகளை சந்தித்து தான் இன்று இந்த நிலைக்கு வந்துள்ளேன் அதற்க்காக எனக்கு உறுதுணையாக இருந்த எனது மனைவி, மற்றும் நண்பர்கள்,என அனைவருக்கும் நன்றிகளை தெரிவிப்பதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் அறிவர் அம்பேத்கர் போக்குவரத்து தொழிலாளர் விடுதலை முன்னணி அமைப்பின் திருப்பூர் மண்டல பொதுச்செயலாளர் மாரியப்பன், மாநில துணை செயலாளர் மணி, மண்டல பொருளாளர்துரைசாமி,ஓய்வு பெற்ற தனி செயலாளர் சார்லஸ், கணேசன், ராஜேஷ் பிரேம் குமார், கோவைமண்டலதலைவர் சக்திவேல், மற்றும் போக்குவரத்து தொழிலாளர்கள் ஓட்டுநர்கள், நடத்துனர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# உண்மையான சமூக நீதியைப் பற்றி தமிழக அரசியல் கட்சிகள் கவலைப்படவில்லை
## கோவையில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூக நீதிக்கான கூட்டமைப்பின் தலைவர் ரத்ன சபாபதி குற்றச்சாட்டு

இதர பிற்படுத்தப்பட்ட சமூக உரிமைக்கான அமைப்பு தலைவர் ரத்ன சபாபதி, கோவை பந்தயசாலையில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்பொழுது அவர் கூறியதாவது..

"உண்மையான சமூக நீதியை பற்றி தமிழக அரசியல் கட்சிகள் கவலைப்படவில்லை" என்று கடுமையாக குற்றம்சாட்டினார்.

குறிப்பாக, ஒபிசி, எஸ்இ, எஸ்டி, மாணவர்களை உயர்கல்வி நிலையங்களில் மனஅழுத்தம், கேலி, கிண்டல் போன்ற வேற்றுமைகளிலிருந்து பாதுகாக்க

பல்கலைக்கழக மானியக்குழு யூஜிசி ஜனவரி 13ஆம் தேதி அறிவித்த

"உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான விதிமுறைகள் 2026"

ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க விதிமுறை என அவர் கூறினார்.

ரோஹித் வெமுலா, பயல் தளத்வி போன்ற மாணவர்களின் மரணங்களுக்குப் பிறகு,



உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இந்த விதிகள் கொண்டு வரப்பட்டதாகவும்,

இது முழுக்க முழுக்க ஒபிசி எஸ்இ எஸ்டி, மாணவர்களின் பாதுகாப்புக்கானது என்றும் விளக்கினார்.

ஆனால், இந்த விதிகள் குறித்து

தமிழக அரசியல் கட்சிகளோ,சமூகஅமைப்புகளோ வரவேற்பு தெரிவிக்கவில்லை என்றும்,

வட இந்தியாவில் எதிர்ப்பு எழுந்தபோதும் தமிழகத்தில் அமைதி நிலவியது வேதனை அளிப்பதாக தெரிவித்தார்.

மேலும்,

42 ஆண்டுகளாக ஒபிசி இடஒதுக்கீட்டில் உள்ள குறைபாடுகள்,

மத்திய அரசு பணிகளில் பதவி உயர்வு மறுப்பு, ஐஐடி, ஐஐஎம், ஐஐஎஸ்இ போன்ற நிறுவனங்களில் நடக்கும் அநீதிகள் குறித்து

அரசியல் கட்சிகள் எந்த உறுதியான போராட்டமும் நடத்தவில்லை என்றும் சாடினார். "சமூக நீதி" என்ற பெயரில் ஓட்டு வங்கி அரசியல் மட்டுமே நடக்கிறது என்று கூறிய ரத்ன சபாபதி, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள்

இந்த அரசியல்வாதிகளின் உண்மையான முகத்தைஉணரவேண்டும்

என்று அவர் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவையில் இந்தியாவின் மிகப்பெரிய 'பேக்யார்டு அல்ட்ரா' மாரத்தான் போட்டி




கோவை சரவணம்பட்டி பகுதியில் உள்ள, குமரகுரு கல்வி நிறுவன வளாகத்தில், மனித சகிப்புத்தன்மையின் எல்லைகளை சோதிக்கும் வகையில்,இந்தியாவின் மிகப்பெரிய 'பேக்யார்டு அல்ட்ரா' எனும், மாரத்தான் போட்டியின் 2-ம் பதிப்பு நடைபெற்றது.

இதில் 123 பேர் பதிவு செய்திருந்த நிலையில், 7 மாநிலங்களை சேர்ந்த 112 வீரர்கள் களத்தில் இறங்கிஓடத்தொடங்கினர்.பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், இதுவே இந்தியாவின் மிகப்பெரிய பேக்யார்டு அல்ட்ரா நிகழ்வாக அமைந்தது வழக்கமான மாரத்தான் போட்டியாக இந்த போட்டிகள் இல்லாமல், குறிப்பிட்ட மைதானத்தில் அனைவரும் ஓடி வருவர் அதில் இறுதி வரை, ஓடிகொண்டே இருக்கும்,கடைசிநபர்போட்டியின்வெற்றியாளர் எனும் விதத்தில் போட்டிகள் நடைபெற்றது. போட்டியாளர்கள் ஒவ்வொரு மணிநேரத்திற்கும் ஒருமுறை 6.7 கி.மீ தூரத்தை ஓடி முடிக்க வேண்டும்.

ஒரு மணிநேரத்திற்குள் முடிக்கத் தவறியவர்களோ அல்லது அடுத்த மணிநேரத்திற்கான விசில் ஒலிக்கும்போது தொடக்க கோட்டில் இல்லாதவர்களோ தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் கடைசியாக ஒருவர் மட்டும்எஞ்சும்வரை இந்தஓட்டம் இரவுபகலாக தொடரும் இதில், வெற்றி பெறும் வீரருக்கு ரூ.25,000ரொக்கப்பரிசு வழங்கப்பட உள்ளதுடன், இந்திய அணிக்கு தேர்வாகும் வாய்ப்பும் வழங்கபட்டது. மேலும்

கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் பதிப்பில், கோவையை சேர்ந்த சந்தோஷ் என்பவர் தொடர்ந்து 37 மணிநேரம் ஓடி சுமார் 248 கிலோமீட்டர் தூரம் வெற்றிபெற்றார். இம்முறை, 52 மணிநேரம் என்ற தேசிய சாதனையை முறியடிப்பதே வீரர்களின் இலக்காக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




கல்கி மகான் ஸ்ரீ மகாலட்சுமி சுவாமிகளின் பொன்மொழிகள்

ஓடி ஓடி அனுபவித்துவிட்டு நாடி நரம்பு தளர்ந்ததற்கு பிறகு இறைவனை நாடி பயனில்லை..

இறைவனை காண வேண்டும் என்றால் அன்பு,கருணை, நீதி, நேர்மை இருந்தால் உன் அருகில் இருக்கின்ற இறைவனை நீ காணலாம். கண கெட்டதுக்கு அப்புறம் சூரியநமஸ்காரம் செய்து என்ன பயன்.உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசி ஒரு பயனும் உனக்கு கிடைப்பதில்லை.

நடிப்பவர் இடத்தில் நடிக்கலாம் உலக நடிகன் அவனிடத்திலே நடிக்கலாமா நீ. உண்மை உறங்காது. உண்மையின் விலை என்ன என்பது இறைவன் [illegible]. உலகில் இளமை சொத்து. ஆடம்பர வாழ்க்கையை இழப்பான். இளமையை எவனும் இழக்க மாட்டான். இளமையை இழக்கிறேன் என்று சொன்னால் வேஷதாரி. அவர்கள் லட்சணத்தை பார்த்தாலே தெரிந்து கொள்ள முடியும் உணர்ந்தவர்கள். சூழ்நிலைக்கு ஏற்ப மாறி பேசுகின்ற மனிதனை கொஞ்சம் நம்பலாம். சூழ்ச்சி உள்ளவனிடத்தில் பழகினால் பாதாள குழி தான் உனக்கு.

வாழ்க சத்தியம் ஜெயிப்பது நிச்சயம் வாழ்க தமிழ்

# கோவை காந்திபுரம் க்ராஸ்கட் சாலையில் உள்ள, ஷங்கர் ஐஏஎஸ் அகாடமியில், "சிகரம் தொடு" என்ற தலைப்பில் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் மாநாடு, க்ரூப் 4 சாதனையாளர்களுக்கான பாராட்டு விழா நிகழ்ச்சி



கோவை காந்திபுரம் க்ராஸ்கட் சாலையில் உள்ள, ஷங்கர் ஐஏஎஸ் அகாடமியில், "சிகரம் தொடு" என்ற தலைப்பில் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல், மாநாடு, மற்றும்,க்ரூப் 4 சாதனையாளர்களுக்கான பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது

இந்த நிகழ்விற்கு முதன்மைவிருந்தினராக கோவை மாவட்ட பயிற்சி துணை ஆட்சியர், ஹரி பிரியங்கா, கலந்து கொண்டு, மாணவர்களையும் பெற்றோர்களையும் ஊக்குவிக்கும் வகையில், சிறப்புரையாற்றினார். அப்பொழுது அவர் கூறியதாவது..

அரசு சேவையை இலக்காகக் கொண்டு பயணிக்கும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கை, தொடர்ச்சியான உழைப்பு மற்றும் சரியான வழிகாட்டுதல் இன்றியமையாதவை என வலியுறுத்தினார்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக

ஊரக வளர்ச்சி துறை இயக்குநர்

விஜய், டிசிடிஒ செல்வ சங்கர், கிருஷ்ண பிரசாத்,

மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார துறை உதவியாளர்

சந்தோஷ், கூட்டுறவு சங்கங்கள் துறை மூத்த ஆய்வாளர் தனலட்சுமி

ஆகியோர் பங்கேற்று, டிஎன்பிஎஸ்சி தேர்வு தயாரிப்பு, நேர மேலாண்மை, மன உறுதி, தேர்வுக்குப் பிந்தைய அதிகாரியின் வாழ்க்கை மற்றும் அரசு சேவையின் பொறுப்புகள் குறித்து தங்களது அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். இந்த மாநாட்டில் டிஎன்பிஎஸ்சி க்ரூப் 1 மற்றும் க்ரூப் 2 ஆகிய சேவைகளில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டு மாணவர்களை ஊக்கப்படுத்தினர்.

இதில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்களும், பெற்றோர்களும், பங்கேற்றனர். தொடர்ந்து "சிகரம் தொடு" நிகழ்வு, டிஎன்பிஎஸ்சி கனவுடன் பயணிக்கும் மாணவர்களை அவர்களின் உயரங்களை அடைய வழிகாட்டும் ஒரு ஊக்க நிகழ்வாக அமைந்தது. தொடர்ந்து, டிஎன்பிஎஸ்சி க்ரூப் 4 தேர்வில் வெற்றி பெற்ற ஷங்கர் ஐஏஎஸ் அகாடமி மாணவர்களுக்கான பாராட்டு விழா நடைபெற்றது. சாதனை புரிந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பாராட்டு நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில்

ஷங்கர் ஐஏஎஸ் அகாடமி கோவை கிளைத் தலைவர் அருண் செந்தில்நாதன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய அளவிலான Dodge ball விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மதுராந்தகம் அதிமுக எம்.எல்.ஏ. மரகதம் குமரவேல் பரிசுகள் வழங்கினார்

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே செண்டிவக்கத்தில் உள்ள




தனியார் பள்ளி விளையாட்டு அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு Dodge ball சங்கம் சார்பில் 18வது சீனியர் தேசிய Dodgeball சாம்பியன்ஷிப் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்ட இந்த விளையாட்டுப் போட்டியினை தமிழ்நாடு Dodge ball ஒருங்கிணைப்பாளர் இளையராஜா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் தமிழ்நாடு ஆந்திரா கேரளா உத்தரபிரதேசம் மகாராஷ்டிரா உள்ளிட்ட 16 மாநிலங்களில் இருந்து Dodge ball போட்டியில் 30 அணியினர் கலந்துகொண்டு மூன்று நாட்கள் விளையாடினர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்குவதற்காக மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் கலந்து கொண்டு மகாராஷ்டிரா அணி ஆண்கள் மற்றும் பெண்கள் முதல் பரிசு பெற்றனர் அவர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் கோப்பை வழங்கப்பட்டது. இரண்டாம் பரிசு மும்பை ஆண் மற்றும் பெண்கள் அவர்களுக்கு கோப்பை பதக்கம் சான்றிதழ் வழங்கப்பட்டது. மூன்றாவது பரிசு தமிழ்நாடு அணி அவர்களுக்கு கோப்பை பதக்கம் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஆசிய Dodge ball கூட்டமைப்பு தலைவர்பிரார், செண்டிவாக்கம் தனியார் பள்ளி தாளாளர் மரிய பிராங்ளின்பிரபு, ஆசிய Dodge ball கூட்டமைப்பு தலைவர்சந்திரபோஸ், செண்டிவாக்கம் தனியார் பள்ளியின் தலைமை ஆசிரியை பாரதி, இணை ஒருங்கிணைப்பாளர் விளையாட்டுக் குழு பிரதாப், சுனில்பாஸ்கரன், தருன் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு வ.உ.சி.பூங்கா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற முதலமைச்சர் விளையாட்டு திருவிழா, "இது நம்ம ஆட்டம் 2026" மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஸ்குமார் உட்பட பலர் உள்ளனர்.



# ஈரோடு மாவட்டத்தில் மிக சிறந்த கல்வி நிறுவனங்களில் தொடர்ந்து மிக சிறப்பாக பணியாற்றி வரும் முதல்வர்களுக்கு தங்கமகன் விருது

ஈரோடு மாவட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி சபை, அனைத்து இந்திய விவசாயிகள் சங்கம் மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ.கோபிநாதன், மாவட்ட செயலாளர் கோ.தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் தூக்கநாய்க்கன்பாளையத்தில் உள்ள டாக்டர் ஜே.கே.கே. முனிராஜா கல்வி நிறுவனங்களின் அங்கமான பொறியியல் கல்லூரி முதல்வர் K.ஸ்ரீதரன், அன்னை ஜே.கே.கே. சம்பூரணியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் P.ரமேஷ், துணை முதல்வர் G வெங்கடேசன் ,அன்னை ஜே.கே.கே. சம்பூரணியம்மாள், கல்வியியல் கல்லூரி முதல்வர் S. ராமசாமி என பல்வேறு கல்வி சார்ந்த சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "தங்கமகன் விருது" ஈரோடு மாவட்ட செயலாளர் G தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

# அச்சிறுப்பாக்கம் அருகே பெரும்பேர்கண்டிகை இரு கோயில்களில் மஹா கும்பாபிஷேகம்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த பெரும்பேர்கண்டிகை கிராமத்தில் செல்வ விநாயகர், சுந்தர விநாயகர் என இரு கோயில்களில் மஹா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் மூத்த அர்ச்சகர் சங்கர் சிவாச்சாரியார் தலைமையில் சிவாச்சாரியார்கள் கோபுர கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் செய்து வைத்தார். இதில் சுற்று வட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்துகொண்ட பக்தர்களுக்கு சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இரு கோயில்களிலும் தொடர்ந்து 48நாள் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் ஆராதனைகளுடன் மண்டல பூஜை நடைபெறும் என்று கோவில் சார்பில் தெரிவித்துள்ளனர்.

# அச்சிறுப்பாக்கத்தில் சத்திய ஞானசபை வள்ளலார் கோவில் தைப்பூச பெருவிழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் பேரூர் தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ள சத்தியஞானசபைவள்ளலார் கோவிலில் தைப்பூசப் பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

வள்ளலார் திருக்கோவிலில் காலை 6-00 மணிக்கு மங்களஇசைகொடியேற்றத்துடன் விழா துவங்கியது. அதனைத் தொடர்ந்து காலை, மதியம் என 1000 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிர்வாகிகள் என்,கருணாநிதி, சந்திரசேகரன், ஆனந்தகுமார், தண்டபாணி, ரத்தின பெரியசாமி, ராமலிங்கம், ராகவன், சேஷாசல ரெட்டியார், புருஷோத்தமன், கோவிந்தராஜன், ஜெயகௌரி,

ஆகியோர் விழாவை தலைமை தாங்கி தொடங்கி வைத்தனர். இதில் அச்சிறுப்பாக்கம் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நிர்வாகிகள் உட்பட பேரூராட்சி பொதுமக்கள் இளைஞர்கள் ஆன்மீக அன்பர்கள் பலர் விழாவில் கலந்து கொண்டனர். குறிப்பாக பிரதி மாதம் தோறும் பூசம் வழிபாடு மற்றும் அன்னதானம் நடைபெறும் என சன்மார்க்க சங்கம் சார்பில் தெரிவித்தனர்.

# "வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இலக்கை எட்டிப்பிடிக்க உதவும் பட்ஜெட்" டிடிவி.தினகரன் பேச்சு

சென்னை: "மத்திய அரசின் இந்த நிதிநிலை அறிக்கை வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இலக்கை எளிதாக எட்டிப்பிடிக்க அனைத்து வகையிலும் உதவியாக இருக்கும்" என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

மத்திய பட்ஜெட் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமர் நரேந்திர மோடியின் சீரிய தலைமையில், இந்தியாவின் நிதிநிலை



அறிக்கையைத் தொடர்ந்து 9வது ஆண்டாக தாக்கல் செய்திருப்பதோடு, அதிக முறை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நிதியமைச்சர்களின் பட்டியலில் இரண்டாவது இடத்திற்கும் முன்னேறியிருக்கும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு எங்களது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவருக்குமான வளர்ச்சி எனும் உன்னத கோட்பாட்டை முன்னிறுத்தித் தயாரிக்கப்பட்டிருக்கும் மத்திய நிதிநிலை அறிக்கை, வளர்ச்சியடைந்த பாரதம் எனும் இந்தியாவின் இலக்கை எளிதாக எட்டிப்பிடிப்பதற்கான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைந்திருப்பது வரவேற்புக்குரியது.

ஆதிச்சநல்லூர் உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத் தளமாக மேம்படுத்தப்படுவதோடு, கலாச்சார செழுமையை விளக்கும் வகையில் கலாச்சார மையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு தமிழர்களின் பாரம்பரியத்தைப் பெருமைப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

அதோடு ஐதராபாத் முதல் சென்னை வரையிலும், சென்னை முதல் பெங்களூரு வரையிலும் அதிவேக ரயில் வழித்தடங்கள், பழவேற்காடு ஏரியில் பறவைகளைக் காண பிரத்தியேக காட்சி மையம், பொதிகை மலையில் மலையேற்றத்தை ஊக்குவிக்கத் திட்டம் என தமிழகத்திற்கென பல்வேறு திட்டங்கள் மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

விவசாய வளங்களை அணுக ஒருங்கிணைந்த அமைப்பு உருவாக்கம், 2030 ஆம் ஆண்டிற்குள் முந்திரி மற்றும் கோகோ உற்பத்தியில் இந்தியாவைத் தன்னிறைவு அடையச் செய்யவும், ஏற்றுமதிக்கான திறனை அதிகரிக்கவும் பிரத்தியேக திட்டம், தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தேங்காய் ஊக்குவிக்குப்புத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் வேளாண்மை மீதான மத்திய அரசின் அக்கறையை வெளிப்படுத்துகின்றன.

# மத்திய பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் ஒரே துறை?



மன நலம் மற்றும் சிகிச்சை முறைகள், மருத்துவ அவசரகாலத்தில், குடும்பத்தினர் எதிர்கொள்ளும் நிதிச் சிக்கலை குறிப்பாக ஏழை, எளிய மக்களை அதிகம் பாதிக்கும் மருத்துவச்செலவுகளை கவனத்தில் கொண்டு, அதனைக் குறைக்கும் வகையில் நாடு முழுவதும் மருத்துவ மையங்களை ஏற்படுத்துதல், மருத்துவமனை உள்கட்டமைப்புகளை உருவாக்குதல், மனித வளத்தை அதிகரித்தல் போன்றவற்றில் மத்திய அரசு கவனம் செலுத்துவதாக பட்ஜெட் உரையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

வட இந்தியாவுக்கு தேசிய மனநல மருத்துவமையம் ஏற்படுத்தப்படும். பல்வேறு மண்டலங்களில் தற்போது அடிப்படை தேசிய மருத்துவ மையங்கள் குறைவாகவே இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வட இந்தியாவில் தற்போது தேசிய மனநல மருத்துவ மையம் இல்லை. எனவே, ராஞ்சி மற்றும் தேஜ்பூர் பகுதிகளில் தேசிய மனநல மருத்துவ மையங்களை ஏற்படுத்துவோம் என்று அறிவித்தார்.

மாவட்ட மருத்துவமனைகளில், விபத்துக் கால சிகிச்சை அளிக்கும் திறனை 50 சதவீதம் விரிவுபடுத்தப்படும் என்றும், அவசரகால சிகிச்சைக்கு நோயாளியின் குடும்பத்தினர் அதிகமாக செலவிடுவதைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை அமையும் என்றார்.

மறுபக்கம், 17 வகையான புற்றுநோய்க்கு அளிக்கப்படும் மருந்துகளுக்கு அடிப்படை சுங்க வரி விலக்கு அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

அது மட்டுமல்லாமல், 7 அரிதான நோய்களுக்கான மருந்துகளுக்கும், மருத்துவக் காரணங்களுக்காக வெளிநாடுகளிலிருந்து தனிநபர் பயன்பாட்டுக்காக வாங்கப்படும் உணவுகளுக்கும் இறக்குமதி வரி விலக்கு அளிக்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயாளிகளுக்கு பயனளிக்கும் வகையில், புற்றுநோய் மருந்துகளுக்கு இறக்குமதி வரியில் விலக்கு அளிக்கப்படுவதாக நிர்மலா சீதாராமன் தன்னுடைய அறிவிப்பில் கூறினார்.

அடுத்து, பாரம்பரிய மருத்துவத்துக்கும் ஒரு பார்வை

நாடு முழுவதும் மூன்று தேசிய ஆயுர்வேத மையங்கள் அமைக்கப்படும், கரோனாவுக்குப் பிறகு பாரம்பரிய சிகிச்சைகளுக்கு உத்வேகம் கிடைத்திருக்கிறது. ஆயுர்வேத மூலிகைகளை உற்பத்தி செய்து, பயிர் விளைச்சலிலும் லாபம் அடையலாம், எனவே, ஆயுர்வேத மருந்தகங்கள், மருந்து சோதனைக் கூடங்கள் போன்றவை உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

இதுபோலவே உயிரி-மருத்துவத் துறைக்கு நிதி ஒதுக்கீடு, மருத்துவத் துறையில் பணியாற்றும் பணியாளர்களை உருவாக்குவதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.



ஈரோடு மஜீத் வீதியில் உள்ள நிறுவன வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை தாங்கி, குலுக்கலில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மமக மாவட்டத் தலைவர் சித்திக், விசிக மண்டல செயலாளர் ஜாபர் அலி, ஈரோடு மாவட்ட மொத்த காலணி வியாபாரிகள் சங்கத் தலைவரும், மாநகர வர்த்தக அணி துணைத் தலைவருமான அஹமது அலி (பாபு) மற்றும் மோஸோ புட்வேர் குழுமத்தினர் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். இதில் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் பாலசுப்பிரமணியர் கோவிலில் தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு, 1008 பால்குட ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. பெண்கள் மற்றும் ஆண்கள் பத்ரகாளியம்மன் கோவிலில் கூடி, பட்டாசு வெடித்து, மேள தாளத்துடன் ஊர்வலத்தைத் தொடங்கினர். பக்தர்கள் காவடி எடுத்து ஆடிச் சென்றனர். ராஜவீதி வழியாக பாலசுப்பிரமணியர் கோவிலை அடைந்த ஊர்வலத்தினர், முருகர் சிலைக்கு பால் அபிஷேகம் செய்தனர். பின்னர், அருட்பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் சிறப்பு அலங்காரத்தில் முருகரை வழிபட்டனர்.




ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூர் ஆதர்ஷ் வித்யாலயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், பல்கலைக்கழக அளவில் மூன்றாம் ரேங்க் பெற்ற மாணவி கே. சந்தியாவுக்கு சிறப்பு விருந்தினர் கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் செண்பகலட்சுமி பதக்கம், கேடயம் மற்றும் பட்ட சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.பல்வேறு துறைகளைச் சேர்ந்த 83 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. மாணவிகள் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்து படித்து வாழ்க்கையில் முன்னேறவும், அரசு வழங்கும் இலவச லேப்டாப் திட்டத்தை அறிவை வளர்க்கப் பயன்படுத்தவும் அவர் அறிவுறுத்தினார்.



ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் பருவாச்சி இரட்டைக்கரடு ஸ்ரீ கல்யாண சுப்பிரமணி முருகன் கோவிலில் நேற்று 01/02/2026 தைப்பூசத் திருநாளன்று அபிஷேகம் மற்றும் அலங்காரம் சிறப்பு பூஜை நடைபெற்றது. இந்த பூஜையில் 200க்கும் மேற்பட்ட ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு முருக பெருமானை தரிசித்து சென்றனர்.

## மத்திய பட்ஜெட் தாக்கம்: பங்குச் சந்தைகள் கடும் வீழ்ச்சி

சென்செக்ஸ் 1,800 புள்ளிகளுக்கு மேல் சரிந்தாலும், பட்ஜெட் முழுமையாக தாக்கல் செய்யப்பட்ட பின்னர் மீண்டு 1,000 புள்ளிகள் சரிந்த நிலையில் வர்த்தகமானது. அதே சமயம், பிற்பகல் 1:09 மணி நிலவரப்படி, என்எஸ்இ நிஃப்டி50யானது 211.35 புள்ளிகள் சரிந்து 25,109.30 ஆக இருந்தது. இன்று நிஃப்டி 50 குறியீடு 25,333.75 இல் வர்த்தகத்தை தொடங்கியது. அதே நேரத்தில் பிஎஸ்இ சென்செக்ஸ் 82,445.97-இல் தொடங்கியது.

பிஎஸ்இ சென்செக்ஸ் பட்ஜெட் தாக்கலின் போது 2,370.36 புள்ளிகள் அல்லது 2.88 சதவீதம் சரிந்து, 80,000 புள்ளிகளுக்கு கீழே சென்றது. அதேபோல 50 பங்குகளைக் கொண்ட என்எஸ்இ நிஃப்டியும் இதே சரிவைப் பிரதிபலித்து, 748.9 புள்ளிகள் அல்லது 2.95 சதவீதம் சரிந்து 24,571.75 ஆக இருந்தது.

பாரத் எலெக்ட்ரானிக்ஸ் பங்குகள் 6.50 சதவீதம் சரிந்தது, அதே நேரத்தில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, எச்சிஎல் டெக், டாடா ஸ்டீல், ஏசியன் பெயிண்ட்ஸ் மற்றும் எடர்னல் ஆகிய பங்குகளும் சரிவை சந்தித்தன. சன் பார்மா, கோடக் மஹிந்திரா வங்கி மற்றும் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் ஆகியவை லாபம் ஈட்டிய பங்குகள் ஆகும்.



ஈரோடு, மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தைப்பூச தேரோட்டம் நேற்று நடைபெற்றது. இதை முன்னிட்டு அதிகாலை 5 மணி அளவில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து சாமிகள் திருத்தேரில் எழுந்தருளி திருதேரோட்டம் நடைபெற்றது. தேரோட்டத்தை அமைச்சர் சாமிநாதன் தொடங்கி வைத்தார்.



## தூத்துக்குடியில் அதிமுக சார்பில்
## முதற்கட்ட தேர்தல் அறிக்கை அடங்கிய துண்டு பிரசுரத்தை முக்கிய வீதிகளில் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லப்பாண்டியன் வழங்கினார்

சட்டமன்றபொது தேர்தலை முன்னிட்டு அதிமுக சார்பில் தேர்தல் அறிக்கையாக முதற்கட்டம் ஐந்து திட்டங்களை அதிமுக பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி எம்.ஜி.ஆர் பிறந்த நாளன்று அறிவித்தார். அதோடு அறிவித்த திட்டங்களின் தொகுப்பை பொதுமக்களிடையே தெரியப்படுத்தும் விதமாக துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடத்தில் விநியோகிக்க உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி முன்னாள் அமைச்சரும் மாநில வா்த்தக அணி செயலாளருமான சி.த.செல்லப்பாண்டியன் தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் வியாபாரிகள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினருக்கும் முக்கிய வீதிகள் வழியாக சென்று துண்டு பிரசுரம் விநியோம் செய்தா்.

நிகழ்ச்சியில் தெற்கு மாவட்ட துணை செயலாளர் சந்தனம், மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் சேகர், வர்த்தக அணி செயலாளர் துரைசிங், முன்னாள் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ராஜகோபால், வடக்கு மாவட்ட ஜெ பேரவை துணைச் செயலாளர் அமலதாசன், முன்னாள் நகர் மன்ற தலைவர் மனோஜ்குமா், துணைத்தலைவர் ரத்தினம், முன்னாள் கவுன்சிலா்கள் அகஸ்டின் எட்வின் பாண்டியன், சகாயராஜ், முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜாராம், மாவட்ட மகளிர் அணி துணை செயலாளர் சண்முகத்தாய், வட்ட செயலாளர்கள் சகாயராஜா, அருண்குமா், மாவட்ட பிரதிநிதிகள் அசரியான் ஜேடியம்மா சாந்தி போக்குவரத்து பிரிவு நிர்வாகிகள் டெரன்ஸ் சண்முகராஜ், ராஜேந்திரன், பேச்சியப்பன், முருகன், சிறுபான்மை பிரிவு அனிஸ்டஸ், அபுதாஹிர் மற்றும் ராஜா, அந்தோனி, செல்வராஜ், மணிகண்டன், ஜோதிகா, மாரி, நயினார் சுப்புராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள பிரசித்தி பெற்ற கோபிசெட்டிபாளையம் பச்சைமலை முருகன் கோவிலில், தைப்பூசதினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் காவடி சுமந்து வந்து சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து, பச்சமலை பாலமுருகன் தைப்பூச அன்னதான குழு சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



ஈரோடு மாவட்டம் மலையப்பாளையம் அடுத்த ஸ்ரீ உதயகிரி முத்து வேலாயுத சுவாமி திருக்கோவிலில் தைப்பூசத்தை முன்னிட்டு செட்டிபாளையம் பகுதியில் இருந்து 200க்கும் மேற்பட்டோர் காவடி எடுத்தும் பால்குடம் தூக்கிகொண்டும் நடைபயணமாக மேளதாளம் முழங்க கோவிலுக்கு வருகை புரிந்து சுவாமி தரிசனம் செய்தனர்.




ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் அருகே நம்பியூர் அடுத்த மலையப்பாளையம் ஸ்ரீ உதயகிரி முத்து வேலாயுத சுவாமி திருக்கோவிலில் தைப்பூச திருவிழா நேற்று (01022026) வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவை முன்னிட்டு, பேருந்து நிறுத்தத்தில் இருந்து பெருமாள் கோவில் வரை சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவிற்கு சிறிய மற்றும் பெரிய தேர்கள் பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு, 'அரோகரா' என கோஷம் எழுப்பி சாமி தரிசனம் செய்தனர். மலையப்பாளையம் முருகன் கோவில் தைப்பூச திருவிழா சிறப்பாக நடைபெற்றது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் உள்ள மிகவும் பழமையான அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் உள்ளது இந்த கோவிலில் தைப்பூச திருவிழாவையொட்டி இன்று மகாபிஷேகம் நடைபெற்றது அப்பொழுது அபிஷேகப்பொடி, பால், தயிர், பன்னீர், இளநீர், பஞ்சாமிர்தம், விபூதி மற்றும் சந்தனம் உட்பட பல்வேறு வகையான பாசனை திரவியங்கள் மூலம் மகா அபிஷேகம் செய்யப்பட்டு தண்டாயுதபாணி சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது தொடர்ந்து சங்கல்பம் செய்யப்பட்டு மலர் அர்ச்சனை நடைபெற்ற பின்பு மகா தீபாராதனை நடைபெற்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அரோகரா கோஷம் வழங்க தண்டாயுதபாணி சுவாமியை வணங்கினர் தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

## பழனி முருகன் கோவிலில் ஒரே நாளில் 1.20 லட்சம் பக்தர்கள் தரிசனம்



பழனி முருகன் கோவிலில் வரலாறு காணாத வகையில் ஒரே நாளில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பக்தர்கள் தரிசனம் செய்திருப்பதாக அமைச்சர் சேகர்பாபு பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

மருதமலை முருகன் கோயிலில் மின் தூக்கி வசதியை அமைச்சர் சேகர்பாபு தொடங்கி வைத்தார். மேலும், சுவாமி மலை கோவில் லிப்ட் வசதி பிப்ரவரி மாதம் இறுதிக்குள் நடைமுறைக்கு வரும் என்றும் அமைச்சர் சேகர்பாபு கூறினார்.

கோவை மருதமலை சுப்பிரமணியசாமி கோவிலில் தைப்பூச திருநாளில் பக்தர்களுக்கு மின் தூக்கி(லிப்ட்) வசதியை பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்த இந்து சமய அறநிலை துறை அமைச்சர் சேகர்பாபு, பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்பொழுது அவர் பேசுகையில், உலகெங்கிலும் இருக்கின்ற தமிழ் கடவுள் முருக பக்தர்களுக்கு தைப்பூசத் திருநாளில் முருகனை வழிபட்டு இறை அருள் வேண்டுவது, இன்றைக்கு வைக்கின்ற கோரிக்கைகள் முழுமையாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு, வருகின்ற முருக பக்தர்களுக்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் பல திருக்கோயில் சிறப்பு கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கு முருகப்பெருமானை தரிசித்து வருவதாக கூறினார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.